**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.127/2021 –** P.W.13

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. நடராஜன் | Father's Name. தொத்தையா |
| Village : ஆண்டிமடம் | Age: 55 |
| Date :06.03.2026 | தொழில் : காவல் ஆய்வாளர் |

நம்பர்: 9498164900

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **06th day of March 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamaheswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **06th day of March 2026.**

Signature of Interpreter

**(எதிரிகள் ஆஜர். )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.07.2014ஆம் தேதி கீழையூர் வட்டக் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து, திருக்குவளை காவல் நிலைய குற்ற எண்.106/2014, இ.த.ச.பிரிவுகள்.294(b), 341, 324, 307–ன் கீழ் வழக்கை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. செல்வராஜ் என்பவர் பதிவு செய்திருந்ததை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 16.45 மணிக்கு சம்பவ இடம் சென்று

சாட்சிகள் தமிழ்வாணன் மற்றும் ரவி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வைமகஜரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பார்வைமகஜர் **அ.சா.ஆ.12**. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.13**.

அன்றே 17.30 மணிக்கு சம்பவ இடத்தில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சுமார் 195 செ.மீ நீளமுள்ள மூங்கில் கட்டை ஒன்றை மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர்தான் தற்போது காட்டப்படுவது. கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.14**. பின்பு சாட்சிகள் உத்தராபதி, செல்வமணி, அன்பழகன், கண்ணதாசன், சிங்காரவேலு, துபாய்செல்வராஜ், தங்கநாகராஜன், தமிழ்வாணன் மற்றும் ரவி ஆகியார்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி கைப்பற்றப்பட்ட மூங்கில் கட்டையை படிவம் 91னின் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம்–91 **அ.சா.ஆ.15**. எனக்கு பணிமாறுதல் வந்துவிட்டதால் வழக்கு கோப்பை நிலைய எழுத்தரிடம் ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**.

நான் எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை திருக்குவளை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கீழையூர் வட்டக் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன் என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை. எந்த தேதியில் பணிமாறுதல் ஆனேன் என்றால் ? இந்த வழக்கு சம்பவம் நடைபெற்ற ஒரு வாரத்தில் பணிமாறுதலாகி இருப்பேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடத்திலும், பார்வைமகஜரிலும் சம்பவ இடம் அருகே அரசியல் கொடிக்கம்பமும், அங்கு அதை அமைக்கப்பட்டதற்கான காங்கீரீட்டும் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன். நான் கைப்பற்றப்பட்ட சா.பொ.1 ஆன மூங்கில் கட்டையின் நீளம், அகலம்,

விட்டம் ஆகியவைகள் எவையும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல, நீளம் குறிப்பிட்டுள்ளேன். நான் கைப்பற்றிய சா.பொ.1ரில் இரத்தக்கறை எதுவும் இல்லை. உத்தராபதி மருத்துவமனையில் சேர்ந்த அன்றே 1ம் எதிரி மார்பில் கத்திக்குத்துடன் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். அது சம்பந்தமாக திருக்குவளை காவல் நிலையத்தின் குற்ற எண்.107/2014 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

நான் சம்பவ இடத்தில் வைத்து சா.பொ.1 ஆன மூங்கில் கட்டையை கைப்பற்றவில்லை என்றும், நான் வழக்கிற்காக எங்கிருந்தோ கொண்டு வந்து காவல் நிலையத்தில் வைத்திருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட அ.சா.1 உத்தராபதியை விசாரணை செய்தேன். அவரை எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்றால் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். எந்த தேதியில் விசாரணை செய்தேன் என்றால் ? 01.07.2014ஆம் தேதியன்று விசாரணை செய்தேன். 1ம் எதிரி ஜோதிபாசு கொடுத்த புகாரின் அடிப்படையில் நான் இவ்வழக்குடன் இணையாக விசாரணை செய்தேனா ? என்றால் இல்லை.

இந்த சம்பவத்தில் 1ம் எதிரிக்கும், அவரது மனைவியான 2ம் எதிரிக்கும் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் அதுபற்றி நான் விசாரிக்காததால் எனக்கு தெரியாது. ஏன் மருத்துவமனைக்கு சென்று 1 மற்றும் 2ம் எதிரிகளை நான் விசாரிக்கவில்லை என்றால் தனிப்பட்ட காரணங்கள் இல்லை. அ.சா.1 உத்தராபதியின் உடன்பிறந்த அண்ணன் பன்னீர்செல்வம் என்பவர் திருவாரூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் முக்கிய பணியில் இருந்து வந்ததால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த எதிரிகளுக்கு எதிராக இந்த வழக்கு

ஜோடிக்கப்பட்டது என்றும், அதற்கு ஆதரவாக நான் ஒருதலைபட்சமாக செயல்பட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல.

உத்தராபதியும், அவர்களை சேர்ந்தவர்களும்தான் 1ம் எதிரியும், அவரது மனைவியும் மோட்டார் சைக்கிளில் சென்றபோது அவர்களை வழிமறித்து, அ.சா.1 உத்தராபதிதான் பிச்சுவாள் கத்தியால், 1ம் எதிரியின் வலதுபக்க நெஞ்சில் குத்தி கொடுங்காயம் விளைவித்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது, நான் அது சம்பந்தமாக விசாரிக்கவில்லை. அ.சா.1 உத்தராபதிக்கு எதிராகத்தான் நான் இ.த.சபிரிவு.307–ன் கீழ் வழக்கு பதிவு செய்திருக்க வேண்டும் என்றும், ஆனால் நான் உத்தராபதிக்கு சாதகம் செய்ய நினைத்து, அவருக்கு எதிராக சாதாரண வழக்கும், எதிரிகளுக்கு எதிராக கொலை முயற்சி வழக்கும் போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

இந்த வழக்கின் புகார் பெற்றதில் இருந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது, சாட்சிகளை நான் விசாரணை மேற்கொண்டது உள்ளிட்டவைகள் திருக்குவளை காவல் நிலையத்தில் பராமரிக்கும் பொது நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்குமா ? என்றால் வழக்கு பதிவு செய்தது மட்டும்தான் குறிப்பிடப்பட்டிருக்கும். படிவம்–91 உடன் சா.பொ.1 ஆன மூங்கில் கட்டையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது தொடர்பாக மேற்படி காவல் நிலைய பொது நாட்குறிப்பில் குறிப்பிடப்படுமா என்றால் ? இல்லை. சா.பொ.1 ஆன வழக்கு சொத்தை யார் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன் என்றால் நீதிமன்றத்திற்கு எங்கள் காவல் நிலையம் சார்பாக செல்லும் காவலர் மூலம் ஆஜர் செய்தேன். அவரது பெயர் தற்போது ஞாபகம் இல்லை. அவருக்கு மேற்படி பணிக்காக கடவு சீட்டு வழங்கி நான் அனுப்பி வைத்தேனா ? என்றால் மேற்படி காவல் நிலைய உதவி ஆய்வாளர் கடவு சீட்டு வழங்கி இருப்பார்.

அ.சா.1 உத்தராபதி எனது விசாரணையில் தன்னை இரும்பு பாரையால் தாக்கியதாக கூறியுள்ளரா என்றால் ? இரும்பு கம்பியால் 2ம் எதிரி தாக்கியதாக கூறியுள்ளார். மற்ற மூன்று எதிரிகளும் மூங்கில் கட்டைகளால் தன்னை தாக்கியதாக அ.சா.1 உத்தராபதி எனது விசாரணையில் கூறியுள்ளார். திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அ.சா.1 உத்தராபதி எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றால் ? அதுபற்றி எனக்கு தெரியாது. நான் பணி மாறுதலாகி சென்றபோது இந்த வழக்கில் நான் மேற்கொண்ட புலன் விசாரணை சம்பந்தமாக ஏதேனும் குறிப்புரை எழுதி வழக்கு கோப்புடன் ஒப்படைத்துவிட்டு சென்றேனா ? என்றால் இல்லை. திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அ.சா.1 உத்தராபதியை விசாரணை செய்த நான் மேற்படி மருத்துவமனையில் இருந்து 25 கிலோமீட்டர் தூரம் உள்ள திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த 1 மற்றும் 2ம் எதிரிகளை ஏன் விசாரிக்கவில்லை என்றால் ? அவர்கள் சிகிச்சைக்கு அனுமதியானதும், அதுசம்பந்தமாக வழக்கு பதிவு செய்த விவரமும் எனக்கு தெரியாது.

நான் திருக்குவளை காவல் நிலையத்தின் வட்டக் காவல் ஆய்வாளர் என்ற அடிப்படையில் எனக்கு இந்த வழக்கும், அதற்கு அடுத்த குற்ற எண்ணில் 1ம் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்த வழக்கும் நன்கு தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக அதுபற்றிய விவரம் தெரியாது என்பதுபோல அ.சா.1 உத்தராபதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பட்டியல் சாட்சி 2 செல்வமணியை எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்றால் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தேன். அ.சா.1 மற்றும் 2 எனது விசாரணையில் சம்பவம் நடந்த உடனேயே சம்பவ இடத்திற்கு திருக்குவளை

காவல் நிலைய போலீசார் வந்ததாகவும், அவர்கள்தான் தங்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும் சொல்லியுள்ளார்களா ? என்றால் அதுபோல சொல்லவில்லை.

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடம் சென்று, பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தததாகவும், சா.பொ.1 ஆன வழக்கு சொத்தை கைப்பற்றியதாகவும் அளித்த சாட்சியம் தவறானது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.03.06 16:26:32 +0530